Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 14 வியாழக்கிழமை (25-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 90

# பொலனறுவையில் மினி முகாம் தகர்ப்பு

## ஒன்பது இராணுவத்தினர் சாவு

### பெருமளவு ஆயுதங்கள் அள்ளப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25

பொலனறுவை மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த மினி முகாம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய 12 நிமிட நேர அதிரடித் தாக்குதலில், அந்த முகாம் தகர்க்கப்பட்டது; ஒன்பது படையினர் பலியானார்கள்; நவீன ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு இராணுவத் தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர்.

மாதுறு ஓயா நீர்த் தேக்கத் திட்டத்துக்குப் பாதுகாப்பாகவும் — பயிற்சி முகாம் நடத்துவதற்காகவும் மாதுறு ஓயாவில் ஸ்ரீலங்கா படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த முகாமுக்கு உதவியாக ''தம்மின்ன'' என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மினி முகாமே விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

மினி முகாமைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றிய பின்னர், முகாமை முற்றாக அழித்தனர். (உ-5-117)

## புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

நேற்று முன்தினம் பொலன்னறுவையில் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களின் விவரம் வருமாறு:-

- 303 ரக எல்.எம்.ஜி. — 01
- மேலதிக சுடுகுழல் — 01
- அதற்குரிய மகஸீன் — 10
- ரவைகள் — 868
- ஆர்.பி ஜி ஷெல் லோஞ்சர் — 01
- ஆர்.பி ஜி ஷெல் — 14
- 2 அங்குல ஷெல் லோஞ்சர் — 02
- அதற்குரிய ஷெல் — 20
- ஜி3 'புஷ்'பட் ரகத் துப்பாக்கி — 01
- அதற்குரிய மகஸீன் — 14

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலை, மாதகலில் சிக்குண்ட ஐவர் விடுதலை

ஏழு மாதங்களுக்கு முன் மாதகலில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பெற்றோரைப் பிரிந்து, படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்துக்குள் சிக்குண்ட மூன்று சிறுமியரும்—

கடந்த ஞாயிற்றுக்கிழமை பறாளை முருகன் கோவிலை அண்டியுள்ள பனங்காணிகளில் விறகு பொறுக்கச் சென்ற சமயம் அங்கு பதுங்கியிருந்த இராணுவத்தினரிடம் சிக்குண்ட மற்றைய இருவரும்—

நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பலாலிக்குச் சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அங்கு அவர்களைப் பொறுப்பேற்று, குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்குக் கூட்டி வந்து, பின்னர் அவர்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

சிவபாலன் குகந்தினி வயது 10), அவரது சகோதரியான சிவபாலன் கிருஷ்ணவேணி (வயது 2), மாணவியான வசந்தகுமாரி நடராஜா (வயது 13) ஆகியோரும் சின்னான் ஐயன் (வயது 58), சின்னக்கிளி அரியபுத்திரன் (வயது 13) ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர்.

(உ-3-109)

## சிறுவனின் கை, கால்களை கட்டி விட்டுத் தாக்கினர்

### விடுதலையானவர் தகவல்

என்னுடன் பிடிபட்ட சின்னக்கிளி அரியபுத்திரன் என்ற சிறுவனை பலாலி முகாம் இராணுவத்தினர் கை, கால்களைக் கட்டிவிட்டு கடுமையாகத் தாக்கினர்.

படையினரின் பிடியிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட சின்னான் ஐயன் (வயது 58) என்பவர் இவ்வாறு கூறினார்.

சில தினங்களுக்கு முன் சுழிபுரம் சந்தியா அகதி முகாமிலிருந்து நாங்கள் ஆறு பேர் பறாளை முருகன் கோவில் பகுதியை அண்டியுள்ள பனங்காணிக்குள் விறகு சேகரிப்பதற்காகச் சென்றோம்.

அங்கு மறைந்திருந்த படையினர் எங்கள் இருவரையும் வளைத்துப் பிடித்தனர். எம்முடன் வந்த நால்வர் ஒருவாறு அவர்களிடம் பிடிபடாமல் ஓடித் தப்பினர்.

பின்னர் எங்களை பலாலி முகாமுக்குக் கொண்டு சென்றனர். இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-109)

## 2 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 25

பொலன்னறுவை மாவட்டத்தில் மினி முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் மோகன் அல்லது ஜெயசீலன் (நடராஜா நவரட்ணராஜா — இருதயபுரம், மட்டக்களப்பு), இரண்டாம் லெப்டினன்ட் கதிரவேல் அல்லது வாமதேவன் (மத்தியூஸ் ராஜு — சொறிக்கல் முனை, சம்மாந்துறை) ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவடைந்தனர். (உ-5)

## பள்ளிக்குடாவில் மோதல்

யாழ்ப்பாணம், பெப் 25

மட்டக்களப்பு பள்ளிக்குடா பகுதியில் கடந்த திங்கள் அதிகாலை இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் கங்காதரன் அல்லது கங்கா (கன்னையா முத்துக்குமார் - பாரதிபுரம்- மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

இந்த மோதல் சம்பவத்தில் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவில்லை. (உ-5)

## அடிக்கடி பறக்கும் ஹெலி

யாழ்ப்பாணம், பெப். 25

கடந்த சில தினங்களாக பகல் வேளைகளில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மாறி மாறி பலாலியிலிருந்து ஆனையிறவுக்கும் பூநகரிக்கும் பறந்த வண்ணம் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நேற்று குடாநாட்டில் விமானங்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்பட்டது.

(உ-15-17-72-117)

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, பெப். 25

யாழ். குடா நாட்டில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியில் இருந்து நீக்கப்பட்டதாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது. (உ-எ)

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், பெப். 25

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் மீட்பு நிதி செலுத்தாதோர் இன்று பிற்பகல் 2 30 மணி முதல் 4 மணி வரை கோப்பாய் ம. வியிலும், மாலை 4 30 மணி முதல் 5 30 மணி வரை நீர்வேலி அத்தியாயர் இந்துக் கல்லூரியிலும் வைத்து அதனைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மூன்றாம் திகதி குமண வரும்

யாழ்ப்பாணம், பெப். 25

ஒரு தொகை உணவுப் பொருள்களுடன் 'குமண' கப்பல் எதிர்வரும் 1 ஆம் திகதி புறப்பட்டு 3 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை கொழும்பில் இருந்து தகவல் கிடைத்தது.

அதேவேளை மற்றொரு கப்பலான ''வதுவ''வில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்—

'குமண' கப்பலை தொடர்ந்து அந்தக்கப்பல் வரும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## குமாரி புறப்பட்டது

நெல்லியடி, பெப். 25

பருத்தித்துறையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த குமாரி கப்பல் இறக்கும் வேலைகள் முடிவடைந்து நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது இக்கப்பலில் வெளியூர்களுக்கான 28 தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (உ-3-109)

## மாதகலில் 'யுத்தகளம்'

கொழும்பு, பெப். 25

மாதகல் பகுதியில் ஆயுத படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைக்கு ''ரண பிம'' (யுத்தகளம்) என்று பெயரிடப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்தது. [உ எ]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 25

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 1 மணிமுதல் வளலாய், இடைக்காடு, தொண்டமானாறு, பத்தமேனி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை அளவெட்டி, மாதகல், காரைநகர் இராணுவமுகாம்களில் இருந்தும் சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி விட்டு விட்டு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களினால் சில வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-17)

## ஆட்கள் காணாமற் போதல்: ஸ்ரீலங்காவுக்கே முதலிடம்!

ஸ்ரீலங்காவில் ஆட்கள் காணாமற்போதல் இன்னும் தொடர்ந்து கொண்டே இருப்பதாக ஐ நா. மனித உரிமைகள் ஆய்வுக் குழு தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

காணாமற் போவோர் எண்ணிக்கை சிறிது குறைந்த போதிலும் அது முற்றாக நிறுத்தப்படவில்லை என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

1992 அக்டோபரில் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்த ஐ. நா அங்கத்தவர் குழு ஒன்று பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆட்கள் காணாமற் போகும் நாற்பது நாடுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கையே அதில் முதலிடம் வகிப்பதாக — அங்கேயே ஆகக் கூடுதலானோர் காணாமற் போவதாக — அந்த அறிக்கை தெரிவிக்கிறது. (அ 6)

## படைத் தலைமை பதவிகளில் விரைவில் மாற்றங்கள் வரும்

### சிறிலின் மாற்றம் முன்னோடி

கொழும்பு, பெப். 25

அரச யுத்த இயந்திரத்தில் தீர்க்கமானதும் முக்கியமானதுமான மாற்றங்களை மேற்கொள்ளும் பொருட்டே, ஜெனரல் சிறில் ரணதுங்காவைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார்.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஆயுதப்படைகளின் தலைமைப் பீடங்களில் தற்போது நிலவும் உட்பூசலை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவே ஜெனரல் ரணதுங்கா மாற்றப்படுகிறார் —

ஜனாதிபதி மேற்கொள்ளவிருக்கும் மாற்றங்களால் போர் உத்திகளை வகுப்பவர்களுக்கு இடையே நிலவும் கருத்துமோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது —

அதன் மூலம் இராணுவப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை அதிகரிப்பு

### வாழப்பாடி கூறுகிறார்

தமிழ் நாட்டில் கடந்த 10 நாட்களாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தைப் போலவே சமீப நாட்களாக பெற்றோல், டீசல் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன என்றும்—

சில தீவிரவாதக் குழுக்களின் உதவியுடன் தான் தமிழக கரையோரப் பகுதிகளில் இத்தகைய கடத்தல்கள் நடைபெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசின் மெத்தனப் போக்குக் குறித்து வருத்தம் தெரிவித்த அவர், அரசு கரையோரப் பகுதிகளில் காவலை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று கோரினார்.

(உ-க-5)

## கிராமசேவையாளர் பதவி நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்.மாவட்டத்தில் கிராம சேவை அலுவலகர்கள் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன. விவரம் வருமாறு:

★ நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு செயலர் பிரிவுகள் — 3 ஆம் திகதி

★ வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு—மேற்கு, வலிகாமம் கிழக்கு செயலர் பிரிவுகள் — 4 ஆம் திகதி

★ வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு — மேற்கு, சங்கானை செயலர் பிரிவுகள் — 5 ஆம் திகதி

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை பிரிவுகளைச் சேர்ந்தோர் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களை தத்தமது உ. அ. அ. பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் —

ஏனையோருக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்....!**

கண்ணால் பார்த்தவற்றை, காதால் கேட்டவற்றை, மனதால் உணர்ந்தவற்றை மற்றவர்க்குக் கூறாது எம்மண்ணைக் காத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தபக்காலத்திற்கு ஏற்ற செபப்புத்தகங்களான சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள், திருமணித்தியாலச் சிலுவைப்பாதை, கல்லறைச் செபம் விற்பனைக்கு உண்டு. ''ஆவே மரியா'' புனித சிந்தாத்திரை மாதா கைத்தொழில் நிலையம், 69/4, மவுன்காமல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (6018)

### துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ் பாடசாலை மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். விவரங்களுக்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6011)

### இலவச திருமண சேவை

32 வயது, அச்சுவினி, செவ்வாய் 2, கண்டாவில் உள்ளவருக்கு மறுமணத்துக்குப் பெண் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பெண்ணை அழைச்சு ஆவன செய்யலாம். சந்திப்பு ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24557)

### யந்திரம்

குடும்ப ஒற்றுமை, வியாபாரவிருத்திக்கு, கல்வி விருத்திக்கு, விவாகத் தடைக்கு, தொழில்தடைக்கு சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன், யந்திரங்களும் வழங்குகிறோம். சாதகத்துடன்வரவும். ஸ்ரீலஸ்ரீ குருக்கள், ஸ்ரீமாவை சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24547)

### தவறிவிட்டது

இரு கதைப்புத்தகங்களும், (St. Rocks Library) பொறியியல் பாடக் குறிப்பும், Calculator (Casio Fx 82) அடங்கிய பை 22-02-93 சிறுப்பிட்டிக்கும், கல்வியங்காட்டிற்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து சி. பரமேஸ்வரன், பற்றீஷியன் தொழில் பயிற்சி நிறுவனம், இல. 59, யாழ்ப்பாணம் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (24582)

### A/L CLASSES

Pure / Applied / Chemistry வகுப்புக்கள் நடைபெறுகின்றன. S. Sivanesarasan B.Sc. (Cey.) மணிபேக்கரி முன்பாக, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சி-4478)

**BITSMANS**
**கல்வி நிறுவனம்**
மானிப்பாய்.

**A/L - 93**

★ கம்பனி முடிவுக் க/கு
★ ஒற்றைப் பதிவு

ஆசிரியர்:
**திரு. ராஜன்**
B. Com. (Hons)

ஆரம்பம்:
**27 - 02 - 1993**
சனி 8-00 a.m.
(சி-4477)

## விசேட பொதுக் கூட்டம்

வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை [26 - 02 - 93] காலை 11-00 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்.
மு. சி. சண்முகராசா.

காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி. [சி-4620]

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகு: 29 — 01 — 1901
விண்ணுலகு: 07 — 03 — 1992

**அமரர் சு. கார்த்திகேய ஐயா**

திதி நாள்: 25 — 02 — 1993

ஆண்டு ஒன்று சென்றாலும், ஆறாத்துயரம் ஐயா! அஞ்சலிசெய்தே கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
நீர்வேலி. (24578)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 12 — 1936
மறைவு: 26 — 01 — 1993

திருமதி
**சுகிர்தரட்ணம் ஆசீர்வாதம்**

''உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்.''

பத்தரை மாற்று பொன்னொன்று போனதோ
பௌர்ணமி நிலவும் நிறைவுற்று சென்றதோ
இப்பெரும் இழப்பினை எப்படித் தாங்குவோம்
இத்தனை துயரம் எமைவிட்டு நீங்குமோ!

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து, சிறப்புற நடத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தியை வேண்டி நிற்கும்:

கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரி, சகோதரங்கள்.

40, பாரதி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (24583)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 01 — 01 — 1915
விண்ணில்: 26 — 01 — 1993

அமரர்
**சீமாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

இறைஞ் ஞனம் மலி கரவைப் பதியின் காவல்
ஈந்தருளும் புனிதர் திரு நாமம் பூண்டு
மறை வாழ்வின் கருணை, அறம், ஒழுக்கம் மேவ
மாட்சிமையோடுயிர் புரந்த மகிபன வாணாள்,
குறையேதும் கூற ஒண்ணா பணியின் நேர்மை
கூறு பந்து மித்திரர் தம் கொற்றம் தாங்கி
பிறவாத யாக்கையுள்ளான் பாதம் சேர்ந்த
பேரறிஞன் சாந்தி பெறப் பிரார்த்திப்போமே!

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் நிறைவிடமாய், எம்மை வளமுடன் வாழ வழி வகுத்து, அழியாத ஓவியமாய் எம நெஞ்சங்களில் நிலைத்து விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் ஆத்ம சாந்திக்காகப் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று 25 - 02 - 1993) வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மைத்துனர்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

''றாஜ் மகால்''
கன்பொல்லை வீதி,
கரவெட்டி, (சி-4619)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(25 — 02 — 1993)



மலர்வு: 26 — 04 — 1953
உதிர்வு: 26 — 01 — 1993

**திருமதி புஸ்பராணி இராசா**
(வேலணை கிழக்கு, வேலணை - 3)

அன்புத் தெய்வமே அம்மாவே!

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் முடிவடைகின்றன உங்கள் நினைவு நாங்கள் இந்த மண்ணில் உள்ளமட்டும் எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனிடம் கண்ணீர் மல்கிப் பிரார்த்திக்கின்றோம்

எமது அன்னையின் சுகயீன வேளைகளிலும், ஈமக்கிரியைகளிலும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்!
அன்புத் தாய், அருமைப் பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

சேணியடி,
கொழும்புத்துறை,
கொக்குவில். (24531)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜலிங்கம் சுப்பிரமணியம்**
(ராசன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி)

அன்னை மடியில்: 03 — 08 — 1959
ஆண்டவன் மடியில்: 07 — 03 — 1992

திதி: 25 — 02 — 1993

நேற்றுவரை நிலாவொளியாய்
நின்றொளிர்ந்த நிறைமதியே!
நெஞ்சமதில் நீங்காத நினைவலையின் நிழலுருவே
வீற்றிருந்த வீடதனை விட்டு நீ பிறையணிந்த
விண்ணவர் விழுச்சுடரை நண்ணிய புண்ணியமே!
ஊற்றுடைத்த நீர் போல நில்லாது உடைத்தோடும்
எனமது உருகிக் கண்ணீராய் பெருகிவிட
கொற்றவரே எங்கள் இதயமதில் கோயில் கொண்டவரே
கோயில் திறந்திருக்க இன்று குலதெய்வம் மறைந்தீரோ!
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பூசையிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்.
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி.

பொற்பதிப்பிள்ளையார் கோவிலடி,
கொக்குவில். (24589)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# புதிய பாதை திறக்கட்டும்!

சில வார கால இடைவெளியின் பின்னர் படையினர் மீண்டும் செவ்வாயன்று குடா நாட்டில் தமது தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றனர். தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளை விஸ்தரிப்பதே இந்தத் தாக்குதல்களின் நோக்கம்.

பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது மூவழித் தாக்குதல்களை — குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, கடல் பிரங்கித் தாக்கு ஆகியவற்றை — நடத்திப் பொதுமக்களை இடம்பெயர்ந்தவர் வகுப்பில் சேர்த்துவிட்டு, விடுதலைப் புலிகளுக்குப் பெரும் அழிவை உண்டாக்கிவிட்டதாக தென்னிலங்கை மக்களுக்குக் கணக்குக் காட்டுவதும் இத்தகைய தாக்குதல்களின் ஒரு நோக்கமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது கடும் பட்டினி நிலை நிலவுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத் தாக்குதல்களை நடத்தினால் பொதுமக்கள் தங்கள் மனோபலத்தை இழக்கிறார்களா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்கும் படையினர் இப்போதைய தாக்குதல்களை முடுக்கி விட்டிருக்கக் கூடும்.

வடக்குக்குத் தனியான சமஷ்டி அமைப்பு. கிழக்குக்குத் தனியான சமஷ்டி அமைப்பு என்ற புதிய உயிரில்லாத தீர்வு ஒன்றை இன்னும் இரண்டொரு வாரங்களில் தெரிவுக்குழு வெளியிடவுள்ளது. அந்தத் தீர்வை எப்படியும் தமிழர்கள் மீது திணித்துவிட இது போன்ற சோதனைகள் அரசுக்குத் தேவைப்படுகின்றன.

சிங்களவர்களைப் போலவே தமிழர்களும் இந்த நாட்டில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகிறார்கள். வடக்கு-கிழக்கு அவர்களது தாயகம். அவர்கள் தமது சொந்த மண்ணில் தமக்குரிய சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு அருகதை உடையவர்கள். இவற்றை அரசு உணர்ந்தால் இந்தச் சோதனைகள் எல்லாம் தேவைப்பட மாட்டா.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஓரளவு நியாயமான முறையில் தீர்த்து வைக்க முயன்ற அமைச்சர் தொண்டமான் தடுக்கப்பட்டார். அதே நேரணையில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணாண்டோ எடுக்கும் முயற்சிக்கும தடங்கல் போடத் தெற்கில் தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவரைக் கிண்டல் செய்யும் விதத்தில் அமைந்த கடிதங்கள் கொழும்புப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. அதற்குப் பின்னால் சிங்களப் பேரினவாதிகளும், அரசியல்வாதிகளும் செயற்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய பின்னணியில் சிங்கள அரசியல்வாதிகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க மாட்டார்கள். இது விடயத்தில் சமயத் தலைவர்களே சமாதானத்துக்கு வழிகாட்ட வேண்டும் என்ற கருத்தும் தென்னிலங்கையரிடம் அரும்பியுள்ளது. பௌத்த குருமார் யாழ். வருவது குறித்து மல்வத்தை மகாநாயக்க தேரரை, ஆயர் கென்னத்பெர்ணாண்டோ சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து மகாநாயக்கர்களின் உயர்சபையான "காரக்க சங்கசபா" வைக் கூட்டி இது விடயத்தை ஆராய்வதாக மகாநாயக்கர் உறுதி அளித்திருக்கிறார்.

அது சாதகமான முறையில் அமையுமா? சமயத் தலைவர்கள் சமாதானத்துக்கு வழிகாட்டி போரை நிறுத்துமாறு அரசை வற்புறுத்தினால் ஒரு புதிய பாதை உருவாகும். அந்தப் புதிய பாதை திறக்கப் படுவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு முக்கியமானது. கிடைக்குமா? அரசியல்வாதிகளை ஓரங்கட்டிவிட்டு சமயத் தலைவர்கள் வழி செல்லும் துணிவு அவர்களுக்கு வருமா?

# ஆஸ்பத்திரி வார்ட்டில் நோயாளி பட்ட வேதனை!

## தாதியின் அலட்சியப் போக்கு

யாழ். ஆஸ்பத்திரியில் 24 ஆம் இலக்க வார்ட், நேரம் பகல் ஒரு மணி.

அங்கு துடித்துக்கொண்டிருக்கிறார் இளைஞர் ஒருவர். வயிற்றில் ஏற்பட்ட காயத்தில் இருந்து இரத்தம் பீறிட்டு ஓடிக்கொண்டிருக்கிறது!

நேற்று முன்தினம் வலி. மேற்குப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த இளைஞருக்கு அன்றைய தினம் யாழ் ஆஸ்பத்திரியிலும் வேதனை — சோதனை!!

காயமடைந்த அந்த இளைஞர் படுக்கையில் படுத்தபடி வேதனையில் முனகிக்கொண்டிருக்கிறார். "ஸ்ரெச்ச" ருடன் வருகிறார் ஆண் தாதி ஒருவர். அதில் ஏறுமாறு நோயாளியிடம் கூறுகிறார் அவர்.

அந்த நோயாளிக்கு அங்கே உதவிக்கு உறவினர் எவரும் இல்லை. சத்திர சிகிச்சைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறி "ஸ்ரெச்ச" ருக்கு வருமாறு திரும்பவும் அழைக்கிறார் அந்தத் தாதி. ஆனால் காயமடைந்த இளைஞரால் முடியவில்லை.

அவர் தட்டுத் தடுமாறி — மிகவும் சிரமப்பட்டு — ஸ்ரெச்சரில் ஏறுவதற்குப் பிரயத்தனப்படுகிறார்.

ஆனால் அந்த ஆண் தாதி உதவி செய்ய முற்படவில்லை. நோயாளி படும் வேதனையை பார்த்தபடி அசைவின்றி நின்றார். தாதி ஒருவரின் கடமையை அவர் மறந்து விட்டாரோ? என்னவோ!

நேரில் கண்டவரின் மனதில் இப்படி ஒரு கேள்வி எழுந்து மறைகிறது!! (ஒ-162)

# சிறுவர் போசாக்கின்மை கடும் பிரச்சினையாகிறது

## ஆய்வுக் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

பள்ளிப் பருவத்துக்கு முந்திய வயதுள்ள பிள்ளைகளின் போசாக்கின்மை அவசர கவனத்துக்குரிய கடுமையான பெரும் பிரச்சினையாக யாழ்ப்பாணத்தில் உருவெடுத்துள்ளது.

யாழ்ப்பாண மக்களின் போசாக்கு நிலைமை பற்றி ஆய்வு செய்வதற்கு யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு அதன் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

பின்வரும் காரணங்களால் மக்கள் மத்தியில் போசாக்கின்மை நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:-

★ வேலையின்மை, குறைந்த ஊழியத்துடனான வேலை, இடம் பெயர்தல் ஆகியவற்றால் மக்களின் வருமானம் குறைந்துள்ளது அல்லது வருமானமே இல்லாமல் போயுள்ளது. இதனால் போதிய சத்துள்ள உணவை அவர்கள் சாப்பிட முடியாமல் இருக்கிறது.

★ அரசு வழங்கும் இலவச உலர் உணவு மக்கள் "உயிர் வாழ்தலு"க்கு போதியதாக இல்லை. உணவுப் பற்றாக்குறை இதை மேலும் மோசமாக்குகின்றது.

★ வீடுவாசல் அழிக்கப்பட்டதாலும் பய மனோநிலை ஏற்பட்டுள்ளதாலும் வீட்டுத் தோட்டம், ஆடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட மக்கள் பின் நிற்கிறார்கள்.

★ மீன்பிடித் தொழில், விவசாயம் ஆகியன தேக்க நிலையில் அல்லது மிகக் குறைந்தபட்ச நிலையில் உள்ளன. இதனால் மக்கள் மேலும் நிவாரணங்களைச் சார்ந்து வாழ வேண்டியுள்ளது.

★ மலசல கூடங்கள் சேதப்பட்டு பாவிக்க முடியாமல் இருப்பதும் மக்களின் ஆரோக்கிய நிலைமையைப் பாதித்துள்ளது. 1990 முதல் சுகாதார சேவைப் பணிப்பாளரின் மலசல கூட மானியத் திட்டம் யாழ்ப்பாணத்தில் அமுலாக வில்லை. இதனால் மண் மாசுபட்டு புழுக்களும் கிருமிகளும் மலிந்து வயிற்று நோய்கள் அதிகரித்து ஒரு நச்சுத்தனமான நோய் வட்டமே உருவாகியுள்ளது.

போசாக்கு நிலை குறித்து ஆராய்ந்த தெரிவுக்குழுவில் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் திட்டமிடல் அதிகாரிகளும் அங்கம் வகித்தனர். (அ-க-162)

## பள்ளத்தில் பஸ் விழுந்தது

கொழும்பு, பெப். 25

பன்வில பொலீஸ் பகுதியில் தனியார் பஸ் ஒன்று நேற்று 150 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில், 8 பேர் கொல்லப்பட்டனர் 27 பேர் காயமடைந்தனர். (உ-எ)

## ரி. வியினுள் ஹெரோயின்!

கொழும்பு, பெப் 25

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணிபுரிந்துவிட்டு டாங்கொக் வழியாக கொழும்பு திரும்பிய இலங்கைப் பெண் ஒருவரிடம் இருந்து 35 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

அப் பெண் கொண்டுவந்த தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றினுள் இந்த போதைவஸ்து ஒளித்துவைக்கப்பட்டிருந்ததாம். (ஒ-எ)

## புலிகள் கைப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ஜி3 மகஸீன் ஹோல்சர் — 02
- ரி56 துப்பாக்கி — 02
- அவற்றின் மகஸீன் — 08
- ஏ கே. ஹோல்சர் — 03
- நடுத்தர ரவைகள் — 725
- எஸ். எல் ஆர் — 01
- அதற்குரிய மகஸீன் — 09
- நேட்டோ ரவைகள் — 701
- ஷொட் கன் — 01
- பரா வெளிச்சக் குண்டு — 04
- சிறிய கிளைமோர் — 02
- தலைக் கவசம் — 04
- கிட் பாக் — 05
- வயர் றோல் — 01
- தொலை நோக்கி — 01
- மழைக் கவசம் — 01
- தண்ணீர் கான் — 06
- இராணுவப்பட்டி — 07
- இராணுவ சப்பாத்து — 22 சோடி
- சிவில் சப்பாத்து — 10 சோடி
- வீடியோ டெக் — 01
- "அம்பிலிபயர்" — 01

(உ-எ)

## படைத் தலைமை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் உபாயங்களில் செய்யப்படும் மாற்றங்கள் புதிய உத்திகள் மற்றும் ஆக்ரோஷமான யுத்தக் கொள்கை ஆகியன வட பகுதிப் போர் முனையில் விடுதலைப் புலிகளுக்குச் சவாலாக அமையும் — என்றும் "சண்டே லீடர்" கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

# தென்மராட்சிப் பகுதியில் சிறுதானியச் செய்கை

யாழ்ப்பாணம், பெப். 25

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, மந்துவில், வரணி, உசன் போன்ற பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை பெய்த மழையைப் பயன்படுத்தி தென்மராட்சிப் பகுதியில் உள்ள பயிர் நிலங்களில் சிறுதானியப் பயிர்ச்செய்கையை உடன் மேற்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

சிறுதானியச் செய்கையில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் வகையில் கொடுப்பனவு அடிப்படையில் சிறுதானிய விதைகளை விநியோகிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே விவசாயிகள் கொடிகாமத்தில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக தென்மராட்சி கோட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு விதைகளைப் பெற்றுக் கொள்வதுடன் உழவுக்கு பதிவு செய்து உடன் விதைப்பில் ஈடுபடும்படியும் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ)

## புல்லாங்குழல் இசை

# அரங்கேற்றம்



நாதஸ்வர இசைமேதை

## வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள்

இடம் :- அகில இலங்கை இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:- 26 - 02 - 1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணி

தலைவர்:- வைத்திய கலாநிதி ரி கெங்காதரன் அவர்கள்

பிரதம விருந்தினர்:- சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சிறப்பு விருந்தினர்:- திரு. புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், தமிழீழ கலை பண்பாட்டுக் கழகம்)

### அணிசெய் கலைஞர்கள்

வயலின்:- இசைஞான திலகம் ஆர். இராதாக்கிருஷ்ணன்
மிருதங்கம்:- கலாவித்தகர் கே. கண்ணதாஸன்
தவில்:- தவில் வித்துவான் பி. கணேசன்
கெஞ்சிரா:- திரு. எஸ். நாகராஜன்
தம்புரா :- திரு. என். சண்முகலிங்கம்

### வாழ்த்துரை வழங்குபவர்கள்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
சிவஞான பாஸ்கரன் சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள்
இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்கள்
நவாலியூர் திரு. என். சச்சிதானந்தம் அவர்கள்
இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் (தலைவர், அ இ. இளங்கலைஞர் மன்றம்)
திரு. த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி)
திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர், அ இ கம்பன் கழகம்)

### நன்றியுரை

நாதஸ்வர வித்துவான், வீ. கே கானமூர்த்தி

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

### அழைப்பாளர்கள்

நாதஸ்வர வித்துவான், கே. ஆர் சுந்தரமூர்த்தி
நாதஸ்வர வித்துவான், வி. கே. கானமூர்த்தி
நாதஸ்வர வித்துவான், எஸ். ஏ. மகேந்திரன்

ஒலி — நித்தி
ஒளி — மனோ

(சி-1637)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில ஆசிரியர் பரீட்சை

(06 – 03 – 1993)

**வினாத்தாள் வகுப்பு**

*(1990, 1991 வினாத்தாள்)*

27, 28 Feb. சனி, ஞாயிறு

காலை 9 — 12

## ஷேக்ஸ்பியர் அக்கடமி

4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி.

(24587)



## விவசாயிகளே!

★ மிளகாய் ★ கத்தரி

போன்ற

பயிர்களுடன் போட்டியிட்டு வளரும் களைகளை சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்குப் பாவியுங்கள்

## 'டெவ்ரினோல் 50டபிள்யு.பி.'

* களைகள் முளைக்க முன் கட்டுப்படுத்தும் தன்மை.
* பயிர்களின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் தெளிக்கலாம்.
* பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

(தெளிக்கும் பொழுது தரை களைகள் இல்லாது, துப்புரவாகவும், நன்கு ஈரலிப்பாகவும் இருக்க வேண்டும். அதாவது, பாத்தி கட்டி முதல் நீர் பாய்ச்சியதும், அந்த ஈரலிப்புடன் தெளிக்க வேண்டும். 1அவு. டெவ்ரினோலை ஒரு கலன் நீரில் கலக்கவும்.)

CIC

**கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,**

த. பெ. எண் 352, கொழும்பு.

(சி-4474)


## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா மதியாபரணம்**

(ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்)

மலர்வு: **20 – 05 – 1951**

உதிர்வு: **25 – 02 – 1982**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

பதினோராண்டு சென்றாலும் மதியே, மகனே, அண்ணா! மங்கா விளக்காய் நெஞ்சில் வாழ்கிறீர்!

அப்பா, அம்மா சகோதரர், சகோதரி, மைத்துனர்.

ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.

(24590)

# ஆறாவது கண் மாற்று சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று ஆறாவது தடவையாக கண் மாற்றுச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது

தொல்புரத்தைச் சேர்ந்த மருதன் செல்லன் என்ற எழுபது வயதானவருக்கே நேற்று கண் மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டது

விறகு கட்டை கண்ணில் அடித்ததால் நீண்ட காலமாக கண் பார்வை பாதிப்புற்றிருந்த அவருக்கு, முன்னர் செய்த சிகிச்சையால் கண்ணில் ''அல்சர்'' நிலையும் ஏற்பட்டிருந்தது.

கண் மாற்று சிகிச்சை செய்யப்பட்டதால் கண் அல்சரையும் நீக்க முடிந்ததாக சத்திர சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர் குகதாசன் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் இறந்த ஒரு நோயாளியின் கண்ணே மருதன் செல்லனுக்கு மாற்றப்பட்டது. (அ-15)

## உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று காலை 10-30 மணிக்கு விநாயகருக்கு விசேட சங்காபிஷேகமும், பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்று, விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். மாலை 4-30 மணிக்கு விசேட பூசையுடன் சதுர்த்தி உற்சவம் நடைபெறும். (க)

## இன்று

தாளையடி, பெப் 25

வடமராட்சி கிழக்கு கடற்புலி வட்டத்தில் தை, மாசி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று வியாழக்கிழமை செம்பியன்பற்று தெற்கில் இரவு 7-30மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஒ-144)

## நாளை

கைதடி கிராம சபை அலுவலகத்தில் நாளை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். ( -117)

★ ★ ★

கோப்பாய் வடக்கு சரவண பவானந்தா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்

(க-72)

## இலட்சார்ச்சனை

ஆனைக்கோட்டை வண். வடமேற்கு கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை தொடங்கி மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை ஹோமப் பெருவிழா நடைபெறும்.

மார்ச் 7 ஆம் திகதி மாசி மக தினத்தில் காலை நவோத்திர சத சங்காபிஷேகம் இடம்பெறும். (க)

## சட்டம் நிறைவேறியது

பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நேற்று 68 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (உ-எ)

## எச்சரிக்கை

தடையை மீறி பேரணியை பாரதிய ஜனதாக் கட்சி இன்று நடத்த முற்பட்டால், தேவை ஏற்படும் பட்சத்தில் இராணுவத்தையும் அரசு பயன்படுத்தி பேரணியைத் தடுக்கும்.

இந்திய மத்திய உள்நாட்டுப் பாதுகாப்பு இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் இன்று [illegible]


சாவகச்சேரி பிரதேச சபை

# 1993ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

மட்டுவில் கிழக்கு (மானாவளை) மாட்டிறைச்சிக்கடை

மேற்படி கடையை 1993 டிசம்பர் வரை நடத்துவதற்கான கேள்விகள் 04-03-1992 முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி வைப்பு ரூ. 250/-ம், பத்திரப் பணம் ரூ. 100/-ம் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் 03-03-1992 முற்பகல் 10-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 04-03-1993 பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் திறக்கப்படும்.

எமது 07-11-1992ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படும்.

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|
| மட்டுவில் கிழக்கு (மானாவளை) மாட்டிறைச்சிக் கடை (தற்காலிகக் கடை குத்தகைக்காரரால் அமைக்கப்படல் வேண்டும்) | ரூ 5,000/- |

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

கொடிகாமம்,
18-02-1993

(சி-4617)


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சச்சிதானந்தம்

(இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்)

பன்னாலையைச் சேர்ந்தவரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி (கனடா), வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி செந்திற்செல்வனின் மாமனாரும், குருபரன், அபிசாபரன் ஆகியோரின் பேரனுமாகிய சச்சிதானந்தம் காலமாகி விட்டார் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
பரமேஸ்வரி
(பேபி)
(மனைவி)

'கலா வாசம்'
செல்வராசா வீதி,
கோண்டாவில் மேற்கு.

(6019)

## றே. யோ. நிக்கிலஸ் (மனேச்சர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 50/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட றேமந்துப்பிள்ளை யோசவ் நீக்கிலஸ் நேற்றுக் காலமானார்

இவர் சிசிலியாலீலாவின் அன்புக் கணவரும், றஞ்சிதம், கமலலெஸ்லீஸ், காலஞ்சென்ற பார்பரா, சொர்ணம், பரிமளம் ராஜசூரியர், காலஞ்சென்ற அரசசூரியர், காலஞ்சென்ற அருட்சகோதரி நவநேரேஸ், புஷ்பம், றேம்ஸ்சூரியர், விஜயசூரியர், குணசூரியர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பங்கிறாஸ், பஸ்ரியன், சவுந்தரநாயகம், ஸ்ரனிஸ்லாஸ், வில்லியம், மணி, சரஸ், பிரான்சிஸ், றஞ்சி, புவிலா, லெபன்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நி குணசூரியர்
(மகன்)

50/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(24504)

## திருமதி தங்கரத்தினம கணபதிப்பிள்ளை

திருமதி தங்கரத்தினம் கணபதிப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற வி. டி. கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற லிகிதர், சென். ஜோன்ஸ் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜி. ரி. இராசரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி) அன்புச் சகோதரியும் —

காலஞ்சென்ற ஜேம்ஸ் (C. W. B.), துரைரெத்தினம் (ஆசிரியர், சென் சார்ள்ஸ் ம. வி.), ரூபி (ஓய்வு பெற்ற ஆசிரியை), இராஜேஸ்வரி, ஞானேந்திரன் (Pharmacist), இராஜேஸ்வரன் (சுவிஸ்), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

செல்லத்துரை (ஆசிரியர், கலட்டி மெ. மி. த. க. வித்தியாலயம்), போல் (பிரான்ஸ்), சிவமணி, லலிதா, மன்மதராணி, வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் 69, குருசோ வீதி இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக சென் ஜோன்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கே. செல்லத்துரை

69 குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

(24595)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 92/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-02-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org